**செய்தி வெளியீடு** **நாள்: 07.01.2025**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை மேலும் துரிதப்படுத்த மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (7.1.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் சென்னை, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையத்தினையும் (Dialysis Centre), அதே பகுதியில் கட்டப்பட்டு வரும் 700 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும், அண்ணா பிள்ளை தெருவில் அமைக்கப்படவுள்ள புதிய சமுதாய நலக்கூடம் மற்றும் விளையாட்டுத் திடலையும், ஸ்டான்லி மருத்துவமனை அருகில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் மற்றும் ஜார்ஜ் டவுன், பிராட்வே ரோடு, பி.ஆர்.என். கார்டனில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை **மேலும் துரிதப்படுத்த** நேரில் சென்று பார்வையிட்டு களஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ. முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர் திரு.ஸ்ரீராமலு, தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.மா.பாலமுருகன், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு மாமன்ற உறுப்பினர்கள் திரு.பரிமளம், திரு.நவீன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, ஜார்ஜ் டவுன், டான் போஸ்கோ பள்ளியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் பிராட்வே சாலையிலுள்ள செயின்ட் சேவியர் தெரு மற்றும் பிடாரியார் கோயில் தெருக்களில் சாலையோரம் வசித்துவரும் அம்மக்களுக்கு மாற்று இடம் வழங்குவது தொடர்பாக உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.